ETW ACADEMY

**1)** உண்டார் என்ற வினைமுற்றை எதிர்மறை வினையாலனையும் பெயராக மாற்றுக.

A) உண்டவர்

B) உண்டவரல்ல

C) உண்ணாதவர்

D) உண்ணல்

E) விடை தெரியவில்லை

**2)** விழைவுத்தொடர் அல்லாதது.

A) பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே!

B) இளமையில் கல்!

C) உன் திருக்குறள் நூலைத் தருக!

D) உழவுத்தொழில் வாழ்க!

E) விடை தெரியவில்லை

**3)** "அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்" - இந்த அடியில் அமைந்துள்ள எதுகையைத் தேர்க.

A) கூழை எதுகை

B) மேற்கதுவாய் எதுகை

C) கீழ்க்கதுவாய் எதுகை

D) பொழிப்பு எதுகை

E) விடை தெரியவில்லை

**4)** காத்திருக்கிறார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

A) காத்திருக்கிறவர்

B) காத்திருக்கும் நபர்

C) காத்திரு

D) காத்திருந்தார்

E) விடை தெரியவில்லை

**5)** கூட்டப்பெயர்களில் பொருந்தாத இணை எது?

A) கல் - திரள்

B) பழம் - குலை

C) புல் - கட்டு

D) ஆடு - மந்தை

E) விடை தெரியவில்லை

**6)** எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் பாடப்படும் நூல்?

A) குறுந்தொகை

B) அகநானூறு

C) ஐங்குறுநூறு

D) நற்றிணை

E) விடை தெரியவில்லை

**7)** எந்தமிழ்நா - பிரித்து எழுதுக:

A) எந் + தமிழ் + நா

B) எ + தமிழ் + நாவு

C) எ + தமிழ் + நா

D) எம் + தமிழ் + நா

E) விடை தெரியவில்லை

**8)** வெளிப்படை விடைகளைக் கண்டறிக

A) சுட்டு, ஏவல், இனமொழி

B) சுட்டு, மறை, நேர்

C) சுட்டு, நேர், உறுவது கூறல்

D) சுட்டு, நேர், ஏவல்

E) விடை தெரியவில்லை

**9)** விடகேற்ற வினாவைத் தேர்க:

**"கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்"**

A) கரகாட்டம் என்றால் என்ன?

B) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

C) கரகாட்டத்தின் வேறு வடிவங்கள் யாவை?

D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

E) விடை தெரியவில்லை

**10)** "இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என்றத் தொடரில் வெளிப்படுவது ____ வழுவமைதி ஆகும்.

A) கால வழுவமைதி

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

D) மரபு வழுவமைதி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**11)** பொருந்தாச் சொல்லைத் தேர்க:

A) வியத்தல்

B) வாழ்க்கை

C) ஆளல்

D) பாடியவள்

E) விடை தெரியவில்லை

**12)** சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க:

A) வ.உ.சிதம்பரனார் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்

B) வ.உ.சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்

C) வ.உ.சிதம்பரனார் சுதேசிக் கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்

D) வ.உ.சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்

E) விடை தெரியவில்லை

**13)** கொடு என்ற வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற்பெயர்

A) கொடுக்காமல்

B) கொடுக்காத

C) கொடுக்காதவர்

D) கொடுக்காமை

E) விடை தெரியவில்லை

**14)** பொருந்தா மரூஉ எது?

A) உதகமண்டலம் - உதகை

B) புதுக்கோட்டை - புதுவை

C) மன்னார்குடி - மன்னை

D) மயிலாப்பூர் - மயிலை

E) விடை தெரியவில்லை

**15)** மிரியல் - என்ற சொல்லின் பொருள் என்ன?

A) ஊதியம்

B) மிளகு

C) சணல்

D) வெளவால் வகை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**16)** பிறமொழிச் சொல் கலவாத தொடரைக் கண்டுபிடி

A) நாளை பிரதம மந்திரி தமிழகம் வருகிறார்

B) நல்ல பாம்பிற்கு விடம் அதிகம்

C) வானத்தில் பறவைகள் பறந்தன

D) மாலா அலமாரியில் புத்தகத்தை அடுக்கினாள்

E) விடை தெரியவில்லை

**17)** அணி சென்ற சொல்லின் பொருள்கள் எவை?

A) அணிகலன், அழகு

B) இலக்கணம், அணில்

C) ஆடை, அணிதல்

D) நகைகள், அணிதல்

E) விடை தெரியவில்லை

**18)** பொன்ஏர் பூட்டுதல் என்ற நிகழ்வு நடைபெறும் மாதம்?

A) சித்திரை

B) தை

C) ஆணி

D) வைகாசி

E) விடை தெரியவில்லை

**19)** பொருத்துக

(i) கல்வெட்டியல் - 1. Cultural Symbol

(ii) நடுகல் - 2. Hero Stone

(iii) பண்பாட்டுக் குறியீடு - 3. Epigraphy

(iv) புடைப்புச் சிற்பம் - 4. Inscription

(v) பொறிப்பு - 5. Embossed Sculpture

(i) (ii) (iii) (iv) (v)

A) 4 2 5 1 3

B) 3 2 1 5 4

C) 5 2 1 3 4

D) 1 2 3 4 5

E) விடை தெரியவில்லை

**20)** மரவேர் என்பது _______ புணர்ச்சி

A) இயல்பு B) திரிதல் C) தோன்றல் D) கெடுதல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**21)** பின்வரும் எதில் வல்லினம் மிகாது?

A) இரண்டாம் வேற்றுமைத் தொகையில்

B) கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில்

C) என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**22)** மலர்க்கண்ணி - இலக்கணக்குறிப்பு தருக.

A) ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

B) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

C) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

D) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

E) விடை தெரியவில்லை

**23)** தமிழில் நீதிநூல்கள் எப்பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன?

A) பதினெண்மேற்கணக்கு

B) பதினெண்கீழ்க்கணக்கு

C) பத்துப்பாட்டு

D) எட்டுத்தொகை

E) விடை தெரியவில்லை

**24)** அடிசில் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) உளுந்து

B) பச்சைப் பயிறு

C) திணை

D) சோறு

E) விடை தெரியவில்லை

**25)** அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன் - என்பது என்ன ஆகுபெயர்?

A) காரியவாகுபெயர்

B) கருவியாகுபெயர்

C) கருத்தாவாகுபெயர்

D) பண்பாகுபெயர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**26)** அயற் கூற்றைத் தேர்க

A) தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவை புகழ்கிறோம் என்று ஆசிரியர் கூறினார்

B) தென்னாட்டு பெர்னாட்ஷா என்று அண்ணா புகழப்படுவதாக ஆசிரியர் கூறினார்

C) அறிஞர் அண்ணாவை தென்னாட்டு பெர்னாட்ஷா என்று புகழ்கிறோம் என்று ஆசிரியர் கூறினார்.

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**27)** பொருந்தாப் பொருள் எது?

A) வெறி - எருது

B) கழனி - வயல்

C) செறி - சிறந்த

D) இரிய - ஓட

E) விடை தெரியவில்லை

**28)** அனைவரும் - இலக்கணக்குறிப்பு தருக.

A) எண்ணும்மை

B) முற்றும்மை

C) உம்மைத்தொகை

D) வினையெச்சம்

E) விடை தெரியவில்லை

**29)** தாவணி என்பதன் பொருள்?

A) கொட்டகை

B) சந்தை

C) அரங்கம்

D) தெரு

E) விடை தெரியவில்லை

**30)** வினை மரபுகளில் தவறானது

A) பூக்கொய்

B) சோறு தின்

C) பால் பருகு

D) சுவர் எழுப்பு

E) விடை தெரியவில்லை

**31)** சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக

A) தமிழ் கோடுகளால் அமைந்த வளைந்த எழுத்து வட்டெழுத்து எனப்படும்

B) வளைந்த கோடுகளால் அமைந்த வட்டெழுத்து தமிழ் எழுத்து எனப்படும்

C) வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்

D) மேற்கண்ட எதுவும் சரியான தொடர் அல்ல

E) விடை தெரியவில்லை

**32)** நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் ஆகிய நூல்களின் ஆசிரியர்?

A) திரு.விகல்யானசுந்தரனார்

B) இராமலிங்க சாமிகள்

C) வைகுண்ட சாமிகள்

D) குன்றக்குடி அடிகளார்

E) விடை தெரியவில்லை

**33)** பின்வருபவர்களில் முதலாழ்வார்களில் சேராதவர்?

A) பொய்கை ஆழ்வார்

B) பூதத்தாழ்வார்

C) பேயாழ்வார்

D) நம்மாழ்வார்

E) விடை தெரியவில்லை

**34)** 'செல்வத்து பயனே ஈதல்' என்னும் பாடல் அமைந்து ஒரே பொருளைத் தரும் இரு நூல்கள்?

A) திருக்குறள் - நாலடியார்

B) சிலப்பதிகாரம் - மணிமேகலை

C) புறநானூறு - மணிமேகலை

D) திருமுறைகள் - திவ்வியப்பிரபந்தம்

E) விடை தெரியவில்லை

**35)** பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப் பாடல்களை 'மலை அருவி' என்னும் நூலாகத் தொகுத்தவர்?

A) ஆறு.இராமநாதன்

B) நா.வானமாமலை

C) கி.வா. ஜகந்நாதன்

D) சக்திவேல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**36)** "உலகம் உண்ண உண். உடுத்த உடுப்பாய் என்ற கவிஞர் பெயர் யாது?

A) பாரதிதாசன்

B) நாமக்கல் கவிஞர்

C) சுத்தானந்த பாரதியார்

D) தாராபாரதி

E) விடை தெரியவில்லை

**37)** ____ புல்லை மேயும்

A) ஆ

B) தே

C) நொ

D) து

E) விடை தெரியவில்லை

**38)** தொழிற்பெயர் வகையறிக - 'ஓட்டம்'

A) முதனிலைத் தொழிற்பெயர்

B) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

C) விகுதி பெற்ற தொழிற்பெயர்

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**39)** பத்துப்பாட்டிலுள்ள எந்த இரண்டு நூல்களை உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார்?

A) முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி

B) நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு

C) பட்டினப்பாலை, மலைபடுகடாம்

D) பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை

E) விடை தெரியவில்லை

**40)** வரதன் என்ற இயற்பெயரைக் கொண்டவர்?

A) படிக்காசுப் புலவர்

B) கார்மேகப் புலவர்

C) காளமேகப் புலவர்

D) புலவர் களஞ்சியம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**41)** 'வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை / மிக்க சிறப்பின் அரசர் செறின்வல்வார் / எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன / விச்சைமற்று அல்ல பிற' என்னும் பாடல் இடம்பெறும் நூல் எது?

A) இறையனார் களவியல்

B) நாலடியார்

C) இன்னா நாற்பது

D) ஆசாரக்கோவை

E) விடை தெரியவில்லை

**42)** வள்ளுவர் கோட்டத்தைக் கருத்தில் கொண்டு, தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறி

A) அறத்துப்பால் - கருநிறப் பளிங்குக் கல்

B) பொருட்பால் - வெண்ணிறப் பளிங்குக் கல்

C) இன்பத்துப்பால் - பழுப்புநிறப் பளிங்குக் கல்

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**43)** பின்வருவனவற்றுள் திருக்குறளனார் வீ. முனிசாமி அவர்களின் நூல் ஆல்லாதது எது?

A) வள்ளுவர் உள்ளம்

B) வள்ளுவர் காட்டிய வழி

C) வணக்கம் வள்ளுவ

D) திருக்குறளில் நகைச்சுவை

E) விடை தெரியவில்லை

**44)** "புலிசேர்ந்து போகிய கல்அளை போல / ஈன்ற வயிறோ இதுவே / தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" என்ற பாடல் அடிகள் இடம்பெறும் நூல் எது? இப்பாடலை இயற்றிய புலவர் யார்?

A) புறநானூறு & காவற்பெண்டு

B) அகநானூறு & வெண்ணிக்குயத்தியார்

C) புறநானூறு & வெண்ணிக்குயத்தியார்

D) நல்வழி & ஔவையார்

E) விடை தெரியவில்லை

**45)** சிறந்த தமிழ்க்கவிதைகளைத் தொகுத்து பின்வரும் எத்தலைப்பில் இராஜமார்த்தாண்டன் நூலாக்கியுள்ளார்?

A) வெள்ளைப் பறவை

B) கொங்குதேர் வாழ்க்கை

C) கையொப்பம்

D) ஒரு கிராமத்து நதி

E) விடை தெரியவில்லை

**46)** சுரதாவால் இயற்றப்படாத நூல்?

A) அமுதும் தேனும்

B) தேன்மழை

C) சாய்வு நாற்காலி

D) துறைமுகம்

E) விடை தெரியவில்லை

**47)** சொல்லின் செல்வர் என்று போற்றப்படுபவர்?

A) ம.பொ.சிவஞானம்

B) இரா.பி.சேது

C) பெருஞ்சித்திரனார்

D) வே.இராமலின்கனார்

E) விடை தெரியவில்லை

**48)** திருக்குறள் அறத்துப்பால் பகுதியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

A) 25

B) 70

C) 38

D) 133

E) விடை தெரியவில்லை

**49)** எழுவாய் வேற்றுமை என்றழைக்கப்படுவது?

A) முதலாம் வேற்றுமை

B) இரண்டாம் வேற்றுமை

C) ஐந்தாம் வேற்றுமை

D) எட்டாம் வேற்றுமை

E) விடை தெரியவில்லை

**50)** பரிவாதினி என்னும் வீணை எந்த பல்லவ மன்னனின் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது?

A) சிம்மவிஷ்ணு

B) மகேந்திரவர்மன்

C) நரசிம்மவர்மன்

D) நந்திவர்மன்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**51)** மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர் யார்?

A) குமரகுருபரர்

B) சுந்தரர்

C) செயங்கொண்டார்

D) திருமூலர்

E) விடை தெரியவில்லை

**52)** நீதிநெறி விளக்கத்தில் கடவுள் வாழ்த்து உட்பட மொத்தம் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?

A) 101

B) 103

C) 105

D) 102

E) விடை தெரியவில்லை

**53)** பின்வருவனவற்றுள் சுந்தரரோடு பொருத்தமில்லாத பெயரைக் கண்டறிக.

A) வன் தொண்டர்

B) தம்பிரான் தோழர்

C) நம்பியாரூரர்

D) தருமசேனர்

E) விடை தெரியவில்லை

**54)** 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

A) அ + களத்து

B) அக் + களத்து

C) அக்க + அளத்து

D) அம் + களத்து

E) விடை தெரியவில்லை

**55)** இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் என்று திரு.வி.க அவர்களால் வருணிக்கப்படும் நூல்கள்

A) சிலப்பதிகாரம், மணிமேகலை

B) தேவார திருவாசக திருவாய் மொழிகள்

C) பெரியபுராணம், திருக்குறள்

D) பத்துப்பாட்டு, கலித்தொகை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**56)** சுந்தரரின் எந்த நூலை முதல் நூலாகக் கொண்டு, சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தார்?

A) திருத்தொண்டர்த் திருவந்தாதி

B) திருத்தொண்டத் தொகை

C) திருமந்திரம்

D) அற்புதத் திருவந்தாதி

E) விடை தெரியவில்லை

**57)** பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலின் பதிப்பாசிரியர் யார்?

A) செ.இராசு

B) நா. வானமாமலை

C) அ. கௌரன்

D) பக்தவத்சலபாரதி

E) விடை தெரியவில்லை

**58)** 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் யாது?

A) நீதிநூல்

B) இராமாயணம்

C) இறையனார் களவியல்

D) தொல்காப்பியம்

E) விடை தெரியவில்லை

**59)** 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்ற நூலை இயற்றியவர் யார்?

A) ஜெயகாந்தன்

B) பி.ச. குப்புசாமி

C) கு. அழகிரிசாமி

D) வ.வே.சுப்ரமணியன்

E) விடை தெரியவில்லை

**60)** "பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் / அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை" என்னும் பாடல் இடம்பெற்ற சங்க இலக்கிய நூல் எது?

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) ஐங்குறுநூறு

D) கலித்தொகை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**61)** "மாக்கண் முரசம்" என்று முரசு பற்றி பதிவுசெய்துள்ள பத்துப்பாட்டு நூல்?

A) மதுரைக்காஞ்சி

B) நெடுநல்வாடை

C) முல்லைப்பாட்டு

D) குறிஞ்சிப்பாட்டு

E) விடை தெரியவில்லை

**62)** "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை நாணாமே" - என்று துவங்கும் பாடலை இயற்றியவர் யார்?

A) செயங்கொண்டார்

B) சுந்தரர்

C) திருமூலர்

D) மாணிக்கவாசகர்

E) விடை தெரியவில்லை

**63)** "சிறுகதை மன்னன்" எனப் போற்றப்படுபவர் யார்?

A) கி.ராஜநாராயணன்

B) புதுமைப்பித்தன்

C) கு.ப.ராஜகோபாலன்

D) தி.ஜானகிராமன்

E) விடை தெரியவில்லை

**64)** செயங்கொண்டார் எந்த சோழ மன்னனின் அவைக்களப் புலவராக திகழ்ந்தார்?

A) அதிராசேந்திரன்

B) மூன்றாம் குலோத்துங்கச்சோழன்

C) முதலாம் குலோத்துங்கச்சோழன்

D) இரண்டாம் இராசஇராசன்

E) விடை தெரியவில்லை

**65)** ஆண்டாள் எழுதிய திருப்பாவையைத் தழுவி இயற்றப்பட்ட நூல் எது?

A) தைப்பாவை

B) திருவெம்பாவை

C) பூம்பாவை

D) கன்னிப்பாவை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**66)** சாகித்திய அகாதெமி விருதுபெற்ற மு. மேத்தாவின் கவிதை நூல் யாது?

A) ஒரு கிராமத்து நதி

B) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

C) சமுதாய வீதி

D) புதிய உரைநடை

E) விடை தெரியவில்லை

**67)** சின்னச்சீறாவின் ஆசிரியர்?

A) உமறுப்புலவர்

B) குணங்குடி மஸ்தான் சாகிபு

C) பனி அகமது மரைக்காயர்

D) செய்கு தம்பி பாவலர்

E) விடை தெரியவில்லை

**68)** அதியமானுக்காக ஔவையார் யாரிடத்தில் தூதாகச் சென்றார்?

A) வல்வில் ஓரி

B) நல்லியக்கோடன்

C) திருமுடிக்காரி

D) தொண்டைமான்

E) விடை தெரியவில்லை

**69)** தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது பெற்றவர்களில் சேராதவர்?

A) கோமகள்

B) இராஜலட்சுமி

C) அப்துல் ரகுமான்

D) இன்குலாப்

E) விடை தெரியவில்லை

**70)** "போந்தை வேம்பே ஆரென வரூஉம் / மாபெருந் தானையர் மலைந்த பூவும்" - எனச் சேரரை முன்வைக்கும் இலக்கண நூல் எது?

A) யாப்பருங்கலக்காரிகை

B) இறையனார் களவியல்

C) தொல்காப்பியம்

D) தண்டியலங்காரம்

E) விடை தெரியவில்லை



ETW ACADEMY

**71)** அழுக்காறு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பொய்மை

B) பொறாமை

C) பொறுமை

D) சோர்வு

E) விடை தெரியவில்லை

**72)** மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலை தொகுத்தவர் யார்?

A) யூமா வாசுகி

B) அ. வெண்ணிலா

C) கோமகள்

D) கன முத்தையா

E) விடை தெரியவில்லை

**73)** குணங்குடி மஸ்தான் இயற்றாத கண்ணி நூல் யாது?

A) எக்காளக் கண்ணி

B) மனோன்மணிக் கண்ணி

C) பராபரக்கண்ணி

D) நந்தீசுவரக் கண்ணி

E) விடை தெரியவில்லை

**74)** பெருமாள் திருமொழியில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன

A) 143

B) 108

C) 101

D) 105

E) விடை தெரியவில்லை

**75)** பின்வரும் எந்த வழிபாட்டின் ஒரு பகுதியாக தெருக்கூத்துக் கலை உள்ளது?

A) கண்ணகி வழிபாடு

B) அர்ச்சுனன் தபசு

C) மாரியம்மன் வழிபாடு

D) திரௌபதியம்மன் வழிபாடு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**76)** "நெருப்பு பந்தாய் வந்து குளிர்ந்த பூமி" என்று எடுத்தியம்பும் நூல் எது?

A) பதிற்றுப்பத்து

B) பரிபாடல்

C) நற்றிணை

D) கலித்தொகை

E) விடை தெரியவில்லை

**77)** மீனவன் என்று குறிப்பிடப்படும் மன்னன்?

A) சேரன்

B) சோழன்

C) பாண்டியன்

D) பல்லவன்

E) விடை தெரியவில்லை

**78)** கமலாலயனின் இயற்பெயர் என்ன?

A) மதுசூதனன்

B) சொ.விருதாசலம்

C) தருமு சிவராமு

D) வே.குணசேகரன்

E) விடை தெரியவில்லை

**79)** "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்" என புகழப்பெறுபவர் யார்?

A) கம்பர்

B) புகழேந்திப் புலவர்

C) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

D) குமரகுருபர்

E) விடை தெரியவில்லை

**80)** "திருவை" என்பது?

A) பானை செய்யப்படும் மண்

B) சக்கரத்தைச் சுழற்றும் கோல்

C) பானை செய்யும் சக்கரம்

D) பானை வனைதல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**81)** "காவடியாட்டம்" என்ற சொல்லில் "கா" என்பதற்கு பொருள் என்ன?

A) வளைந்திருக்கும் வில் போன்ற அமைப்பு

B) கட்டப்பட்டிருக்கும் துணி

C) பாரந்தாங்கும் கோல்

D) ஆடும் ஆள்

E) விடை தெரியவில்லை

**82)** சா. கந்தசாமி எந்தப் புதினத்திற்காக, சாகித்ய அகாதமி விருதைப் பெற்றார்?

A) சாயாவனம்

B) விசாரனைக் கமிஷன்

C) சுடுமண் சிலைகள்

D) சூர்யவம்சம்

E) விடை தெரியவில்லை

**83)** பின்வருவனவற்றில் கம்பரின் நூல் அல்லாதது எது?

A) சரசுவதி அந்தாதி

B) சடகோபர் அந்தாதி

C) திணையெழுபது

D) திருக்கை வழக்கம்

E) விடை தெரியவில்லை

**84)** மழைவேண்டி நிகழ்த்தப்படும் கலை யாது?

A) பொய்கால் குதிரை ஆட்டம்

B) அர்ச்சுனன் தபசு

C) தோற்பாவைக் கூத்து

D) மரப்பாவைக் கூத்து

E) விடை தெரியவில்லை

**85)** குறிஞ்சித் திணையின் சிறுபொழுது யாது?

A) மாலை

B) யாமம்

C) வைகறை

D) எற்பாடு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**86)** நீதிவெண்பாவை இயற்றியவர் யார்?

A) குமரகுருபர்

B) புகழேந்திப் புலவர்

C) கா.ப. செய்குதம்பிப் பாவலர்

D) மாணிக்கவாசகர்

E) விடை தெரியவில்லை

**87)** "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்" என்னும் குறிப்பு காணப்படும் செப்பேடு எது?

A) திருவாலங்காட்டு செப்பேடு

B) மண்டகப்பட்டு கல்வெட்டு

C) சின்னமனூர் செப்பேடு

D) மாமண்டூர் கல்வெட்டு

E) விடை தெரியவில்லை

**88)** திருவிளையாடற் புராணத்திலுள்ள படலங்கள் எத்தனை?

A) 128

B) 100

C) 108

D) 64

E) விடை தெரியவில்லை

**89)** வள்ளைப் பாட்டு எனப்படுவது யாது?

A) நாற்று நடும்போது பாடப்படும் பாடல்

B) அறுவடையின்போது பாடப்படும் பாடல்

C) கதிரடித்தலின்போது பாடப்படும் பாடல்

D) நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்

E) விடை தெரியவில்லை

**90)** கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) கார்மேகக் கவிஞர்

B) புலவர் குழந்தை

C) நாமக்கல் கவிஞர்

D) தேனரசன்

E) விடை தெரியவில்லை

**91)** நீலகேசி கடவுள் வாழ்த்து நீங்கலாக எத்தனை சருக்கங்களைக் கொண்டது?

A) பதிமூன்று

B) பத்து

C) பன்னிரண்டு

D) பதினான்கு

E) விடை தெரியவில்லை

**92)** கவிமணி தேசிக விநாயகனார் பிறந்த ஊர் எது?

A) உத்தமதானபுரம்

B) செங்கப்படுத்தான் காடு

C) தேரூர்

D) தண்டலம் (எ) துள்ளம்

E) விடை தெரியவில்லை

**93)** சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனி, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதியாரை புகந்தவர் யார்?

A) ரா.பி.சேது

B) சுரதா

C) பாரதிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

E) விடை தெரியவில்லை

**94)** பஞ்சக்கும்மிகள் என்ற நூலைத் தொகுத்தவர் யார்?

A) சு.சக்திவேல்

B) நா. வானமாமலை

C) வெங்கம்பூர் சாமிநாதன்

D) புலவர் செ.இராசு

E) விடை தெரியவில்லை

**95)** தமிழகப் பழங்குடிகள் எனும் நூலை இயற்றியவர் யார்?

A) பக்தவத்சல பாரதி

B) செ.இராசு

C) நா.வானமாமலை

D) ராஜமார்த்தாண்டன்

E) விடை தெரியவில்லை

**96)** காடர்களின் கதைகளை "யானையோடு பேசுதல்" என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்தவர்?

A) வ. கீதா

B) திலகவதி

C) பாமா

D) சு. தமிழ்ச்செல்வி

E) விடை தெரியவில்லை

**97)** தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்ததை நாம் எதன் மூலம் அறிகிறோம்?

A) ஆதிச்சநல்லூர் கல்வெட்டு

B) சின்னமனூர்ச் செப்பேடு

C) குடுமியான்மலை கல்வெட்டு

D) அரச்சலூர் கல்வெட்டு

E) விடை தெரியவில்லை

**98)** செந்தமிழ் அந்தணர் என்றழைக்கப்படுபவர்?

A) பாவாணர்

B) இரா. இளங்குமனார்

C) பெருஞ்சித்திரனார்

D) பரிதிமாற்கலைஞர்

E) விடை தெரியவில்லை

**99)** கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாக விளக்கும் இலக்கியம் எது?

A) குண்டலகேசி

B) சீவகசிந்தாமணி

C) சிலப்பதிகாரம்

D) மணிமேகலை

E) விடை தெரியவில்லை

**100)** ஒருவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படுவது எது?

A) நடுவு நிலைமை

B) கூடாஒழுக்கம்

C) கல்லாமை

D) குற்றங்கடிதல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**101)** சட்டமறுப்பு இயக்கத்தின்போது 'குதாய் கித்மத்கார்' என்னும் இயக்கத்துக்கு தலைமை வகித்தவர் யார்?

A) அபுல் கலாம் ஆசாத்

B) இமாம் சாஹிப்

C) கேளப்பன்

D) கான் அப்துக் கா.ஃபர் கான்

E) விடை தெரியவில்லை

**102)** வாஞ்சினாதனால் கலெக்டர் ஆஷ் சுட்டுக் கொல்லப்பட்ட நாள்?

A) ஜூன் 17, 1911

B) ஜூன் 19, 1911

C) ஆகஸ்ட் 17, 1911

D) ஆகஸ்ட் 19, 1911

E) விடை தெரியவில்லை

**103)** இந்தியாவின் தேசியக் கொடியை வடிவமைத்தவர்

A) உதயகுமார் தர்மலிங்கம்

B) வேங்கட சுப்பாராவ்

C) பிங்காலி வெங்கையா

D) ரபிந்திரநாத் தாகூர்

E) விடை தெரியவில்லை

**104)** சுபாஷ் சந்திரபோஸ் இருமுறை இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அந்த ஆண்டுகள்?

A) 1938 மற்றும் 1939

B) 1940 மற்றும் 1941

C) 1942 மற்றும் 1943

D) 1943 மற்றும் 1944

E) விடை தெரியவில்லை

**105)** பிப்ரவரி 18-23, 1946இல் இராயல் (வேந்திய) இந்திய கடற்படைக் கலகம் நடைபெற்ற இடம்?

A) கொல்கத்தா

B) கொச்சின்

C) சென்னை

D) பம்பாய்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**106)** கதார் கட்சியை 1913-ல் லாலா ஹர் தயால் அவர்கள் எந்நாட்டில் தொடங்கி வைத்தார்?

A) அமெரிக்கா

B) ரஷ்யா

C) ஜப்பான்

D) ஜெர்மனி

E) விடை தெரியவில்லை

**107)** இந்திய மறுமலர்ச்சியின் தந்தை யார்?

A) ராஜா ராம் மோகன் ராய்

B) டேவிட் ஹரே

C) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்

D) ரபீந்திரநாத் தாகூர்

E) விடை தெரியவில்லை

**108)** பூண்டி என்னுமிடத்தில் ஒரு குடிநீர்த்தேக்கத்தை கட்டுவதற்கான திட்டத்தை செயல்படுத்தியவர்

A) காமராஜர்

B) சத்தியமூர்த்தி

C) இராஜகோபாலாச்சாரி

D) அண்ணாதுரை

E) விடை தெரியவில்லை

**109)** "இந்தியாவிற்குத் தேவை பூர்ண சுதந்திரம் மற்றும் வேலைவாய்ப்புகள்; உயரிய பதவிகள் அல்ல" எனக் கூறியவர்?

A) நேரு

B) ராஜாஜி

C) காந்தி

D) அன்னி பெசன்ட்

E) விடை தெரியவில்லை

**110)** அமைச்சரவைத் தூதுக்குழு திட்டம், "அன்றைய காலச் சூழலில் கொண்டுவரப்பட்ட உன்னதமான திட்டம்" என்று வர்ணித்தவர்?

A) நேரு

B) காந்தி

C) இராஜாஜி

D) ஜினா

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**111)** ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

B) நிகர தேசிய உற்பத்தி (NNP)

C) மொத்த தேசிய உற்பத்தி (GNP)

D) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

E) விடை தெரியவில்லை

**112)** 1978இல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நீக்கப்பட்ட பிறகு, 1978 முதல் 1979 வரையிலான ஓராண்டிற்கு செயல்படுத்தப்பட்ட திட்டம் எது?

A) விடுமுறைத் திட்டம்

B) சுழல் திட்டம்

C) கரிபி ஹேட்டோ திட்டம்

D) இணைப்புத் திட்டம்

E) விடை தெரியவில்லை

**113)** உலகப் பொருளாதாரத்தில், வாங்கும் சக்தியின் அடிப்படையில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?

A) ஆறாமிடம்

B) மூன்றாமிடம்

C) எட்டாமிடம்

D) ஐந்தாமிடம்

E) விடை தெரியவில்லை

**114)** கீழ்காணும் எந்த அலுவலரின் நியமனம் தொடர்பாக ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குவதில்லை?

A) மாநில தேர்தல் ஆணையர்

B) மாநில திட்டக்குழு தலைவர்

C) அரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவர்

D) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

E) விடை தெரியவில்லை

**115)** ஒரு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் பெற்ற அவை?

A) மக்களவை

B) மாநிலங்களவை

C) இரு அவைகளும்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**116)** இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகளை அறிமுகப்படுத்திய சட்டத்திருத்தம்?

A) 44வது

B) 42 வது

C) 86 வது

D) 81 வது

E) விடை தெரியவில்லை

**117)** இந்தியாவின் கூட்டாட்சி முறை எந்நாட்டின் கூட்டாட்சி முறையின் அடிப்படையில் உருவானது?

A) அமெரிக்கா

B) நியூசிலாந்து

C) ஆஸ்திரேலியா

D) கனடா

E) விடை தெரியவில்லை

**118)** குப்தர் காலத்தில், ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியான இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்ட ஒடுக்குமுறை வரி?

A) பாகா

B) போகா

C) காரா

D) பலி

E) விடை தெரியவில்லை

**119)** முணுமுணுக்கும் அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றுள்ள கட்டடம் எது?

A) கோல்கொண்டா

B) கோல்கும்பாஸ்

C) ஜாமீ மசூதி

D) ஜூம்மா மசூதி

E) விடை தெரியவில்லை

**120)** ஹரியானாவின் ராகிகர்கியில் கண்டிபிடிக்கப்பட்ட தானியக் களஞ்சியமானது எந்தக் காலத்தை சேர்ந்தது?

A) தொடக்ககால ஹரப்பா

B) பிற்கால மொகஞ்சதாரோ

C) பிற்கால மொகஞ்சதாரோ

D) முதிர்ச்சியடைந்த ஹரப்பா

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**121)** ஹுமாயூன் காலத்தில் பீகாரைச் சுற்றியுள்ள பகுதிகளில் செல்வாக்கு பெற்றிருந்தவர்?

A) அலாவுதீன் ஷா ஆலம்

B) ஷெர்ஷா சூரி

C) நாதிர்ஷா

D) செயிஷ்டகான்

E) விடை தெரியவில்லை

**122)** இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவருக்கு, 1615இல் சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியை ஜகாங்கீரிடமிருந்து பெற்றுத்தந்தவர்?

A) வில்லியம் ஹாக்கின்ஸ்

B) சர் தாமஸ் ரோ

C) சரி ஜேம்ஸ் ஆண்டர்சன்

D) எர்னஸ்ட் ஹம்மிங்க்வே

E) விடை தெரியவில்லை

**123)** பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிபெயர்த்த அக்பரின் அவைக்களப் புலவர் யார்?

A) தோடர்மால்

B) அபுல் பாசல்

C) பெய்சி

D) அபு பக்கர்

E) விடை தெரியவில்லை

**124)** ஆகம சித்தாந்தங்கள் எனப்படுபவை?

A) பௌத்த நூல்கள்

B) சமண நூல்கள்

C) வைணவ நூல்கள்

D) சைவ நூல்கள்

E) விடை தெரியவில்லை

**125)** இரண்டாம் புலிகேசிக்கெதிரான மாமல்லனின் போர் வெற்றியை குறிப்பிடுவது எது?

A) அய்கோலே கல்வெட்டு

B) கூரம் செப்பேடுகள்

C) மணிமங்கலம் கல்வெட்டு

D) விருபாக்ஷா கல்வெட்டு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**126)** இவற்றுள் தமிழகத்தில் கிராம சபை கூட்டங்கள் நடைபெறாத நாள் எது?

A) மார்ச் 22 - உலக தண்ணீர் தினம்

B) ஏப்ரல் 23 - உலக புத்தக தினம்

C) நவம்பர் 1 - உள்ளாட்சி தினம்

D) அக்டோபர் 2 - காந்தியடிகள் பிறந்த தினம்

E) விடை தெரியவில்லை

**127)** _____ இன் முதல் பெண் தலைவராக மாதவி புரி என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

A) உச்சநீதிமன்ற பார் கவுன்சில்

B) நிதி ஆயோக்

C) செபி

D) நபார்ட்

E) விடை தெரியவில்லை

**128)** 2021-ஆம் ஆண்டுக்கான மகளிர் சக்தி விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

A) ஆர்.தாரா

B) சாரதா மேனன்

C) நர்த்தகி நடராஜ்

D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

E) விடை தெரியவில்லை

**129)** பெண்களுக்கான சேவையில் சிறந்துவிளங்கும் பெண்களை கௌரவிக்கும் வகையில் தமிழக அரசின் சமூக நலன் மற்றுய்ம் உரிமைத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வரும் விருது எது?

A) தருமாம்பாள் விருது

B) அன்னை சத்யவாணி முத்து விருது

C) அன்னை முத்துலெட்சுமி விருது

D) அவ்வையார் விருது

E) விடை தெரியவில்லை

**130)** அருந்ததிராயின் இரண்டாவது நாவலான 'Ministry of Utmost Happiness' என்ற நூலினை 'பெருமகிழ்வின் பேரவை' என்றத் தலைப்பில் தமிழுக்கு மொழிப்பெயர்த்தவர்?

A) யூமா வாசுகி

B) ஜி.குப்புசாமி

C) டாக்டர் ஸ்ரீராம்

D) கன முத்தையா

E) விடை தெரியவில்லை

**131)** கங்கோத்ரி பனியாறு எம்மாநிலத்தில் உள்ளது?

A) உத்தரகாண்ட்

B) மேகாலயா

C) மணிப்பூர்

D) அருணச்சலப் பிரதேசம்

E) விடை தெரியவில்லை

**132)** வங்காளதேசத்தில்,கங்கை நதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பத்மா

B) ஜமுனா

C) சாங்போ

D) திகாங்

E) விடை தெரியவில்லை நுழைகிறது

**133)** தமிழகத்தின் வடக்கு எல்லை?

A) புலிகாட் ஏரி

B) ஆனைமலைக் குன்றுகள்

C) கோடியக்கரை

D) கன்னியாகுமரி

E) விடை தெரியவில்லை

**134)** எது காவிரியின் துணை ஆறு அல்ல?

A) ஹேமாவதி

B) நொய்யல்

C) அருணாவதி

D) அர்காவதி

E) விடை தெரியவில்லை

**135)** நந்தா தேவி உயிர்கோள பெட்டகம் எங்குள்ளது?

A) அசாம்

B) உத்தரகாண்ட்

C) மேகாலயா

D) சத்தீஸ்கர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**136)** 2017-ஆம் ஆண்டு இந்திய நீர்ப்பாசன புள்ளிவிவரப் புத்தகத்தின்படி, 2013 - 2014 ஆம் ஆண்டு காலத்தில் ஏரிப் பாசனத்தில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

A) உத்திரபிரதேசம்

B) மத்தியப்பிரதேசம்

C) தமிழ்நாடு

D) குஜராத்

E) விடை தெரியவில்லை

**137)** அண்ணாவால் துவங்கப்பட்டு, அவரே ஆசிரியராக பணியாற்றிய ஆங்கில வார இதழ் எது?

A) ஹோம் ரூல்

B) ரிவோல்ட்

C) ஹோம் லேண்ட்

D) யங் இந்தியா

E) விடை தெரியவில்லை

**138)** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான MSMEs முதலீட்டுத் திட்டங்களில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன?

A) முதலாவது

B) இரண்டாவது

C) மூன்றாவது

D) ஐந்தாவது

E) விடை தெரியவில்லை

**139)** இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் எவ்வாண்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது தந்தைப் பெரியார் நீதிக்கட்சியின் தலைவர் ஆனார்?

A) 1935 B) 1938 C) 1939 D) 1936

E) விடை தெரியவில்லை

**140)** மன்னரையே எதிர்த்துப் போராடி வெற்றிகண்டமைக்காக பெரியாருக்கு, "வைக்கம் வீரர்" எனும் பட்டத்தை அளித்தவர் யார்?

A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

B) கவிமணி தேசிக விநாயகனார்

C) திரு.வி.கல்யாணசுந்தரனரார்

D) பட்டுக்கோட்டை அழகிரி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**141)** பிராமணரல்லாத மாணவர்களுக்காக திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916இல் திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவியவர் யார்?

A) டாக்டர் நடேசனார்

B) சர் பிட்டி தியாகராயர்

C) டி.எம்.நாயர்

D) ஏ. சுப்பராயலு

E) விடை தெரியவில்லை

**142)** நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய "பணியாளர் தேர்வு வாரியத்தை" நீதிக்கட்சி அமைத்த ஆண்டு என்ன?

A) 1924

B) 1929

C) 1926

D) 1928

E) விடை தெரியவில்லை

**143)** சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டிற்கு (ஈரோடு) தலைமை ஏற்றவர் யார்?

A) ஆர்.கே.சண்முகம்

B) பனகல் அரசர்

C) பொப்பிலி அரசர்

D) எம்.ஆர்.ஜெயகர்

E) விடை தெரியவில்லை

**144)** கி.பி. 1930 இல் எங்கு நடந்த சுயமரியாதை மாநாட்டில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?

A) செங்கல்பட்டு

B) திருச்சி

C) வந்தவாசி

D) நன்னிலம்

E) விடை தெரியவில்லை

**145)** வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி வழங்கும் தமிழக அரசின் திட்டம் எது?

A) மூவலூர் ராமாமிருதம் நினைவு மகப்பேறு உதவித்திட்டம் 1989

B) சத்யவாணி முத்து நினைவு மகப்பேறு உதவித்திட்டம் 1989

C) பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகப்பேறு உதவித்திட்டம் 1989

D) டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம் 1989

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**146)** பொருத்துக:

(i) அதியமான் - 1. தகடூர்

(ii) திருமுடிக்காரி - 2. மலையமா நாடு

(iii) வல்வில் ஓரி - 3. கொல்லிமலை

(iv) பாரி - 4. பறம்புமலை

(v) பேகன் - 5. பழனிமலை

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 | 5 |
| C) | 3 | 4 | 2 | 5 | 1 |
| D) | 2 | 1 | 4 | 5 | 3 |

E) விடை தெரியவில்லை

**147)** கீழ்க்காணும் எந்த முறையில் நிலத்தை சொந்தம் கொண்டாடும் உரிமை, நிலத்துக்கான கட்டுப்பாடு போன்றவை நில உரிமையாளரிடம் இருந்தது?

A) ஜமீன்தாரி முறை

B) மஹல்வாரி முறை

C) இரயத்துவாரி முறை

D) இவை எதுவும் இல்லை

E) விடை தெரியவில்லை

**148)** நபார்டு வங்கியின் தலைவராக பதவி வகிப்பவர் யார்?

A) இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்

B) பிரதமர்

C) தலைமை கணக்கு தணிக்கை அலுவலர்

D) ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர்

E) விடை தெரியவில்லை

**149)** இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட திட்டக் காலம் என்ன?

A) 6வது ஐந்தாண்டுத் திட்டம்

B) 8வது ஐந்தாண்டுத் திட்டம்

C) 9வது ஐந்தாண்டுத் திட்டம்

D) 10வது ஐந்தாண்டுத் திட்டம்

E) விடை தெரியவில்லை

**150)** தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (NREP) தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979

B) 1980

C) 1983

D) 1986

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**151)** எதிர்க்கட்சித் தலைவர் யாருக்கு இணையான அந்தஸ்து மற்றும் நிலையைப் பெற்றவராவார்?

A) பிரதமர்

B) சபாநாயகர்

C) கேபினெட் அமைச்சர்

D) கொறடா

E) விடை தெரியவில்லை

**152)** எந்த அரசியமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி வாக்களிக்கும் வயது 21-லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது?

A) 52 வது

B) 61 வது

C) 81 வது

D) 86 வது

E) விடை தெரியவில்லை

**153)** மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவராக செயல்படுபவர்?

A) ஆளுநர்

B) சபாநாயகர்

C) மாநிலங்களவைத் தலைவர்

D) முதலமைச்சர்

E) விடை தெரியவில்லை

**154)** மாண்புமிகு திரு வெங்கைய்யா நாயுடு அவர்கள் தற்போது எதற்காக ஊதியம் பெறுகிறார்?

A) துணைக் குடியரசுத்தலைவர் பதவிக்காக

B) மாநிலங்களவையின் தலைவர் பதவிக்காக

C) A & B

D) அவர் ஊதியம் எதுவும் பெறுவதில்லை

E) விடை தெரியவில்லை

**155)** இந்திய அரசியலமைப்பின் எந்த அட்டவணை அங்கீகரிக்கப்பட்ட மொழிகளைப் பற்றிக் கூறுகிறது?

A) எட்டாவது அட்டவணை

B) பதினோராவது அட்டவணை

C) நான்காவது அட்டவணை

D) ஆறாவது அட்டவணை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**156)** மறுபரிசீலனை செய்யுமாறு எந்த மசோதாவை குடியரசுத்தலைவர் திருப்பி அனுப்ப முடியாது?

A) சாதாரண மசோதா

B) நிதி மசோதா

C) திருத்தச்சட்ட மசோதா

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**157)** இறையுணர்வு, தேசப்பற்று மற்றும் பொதுச் சேவை ஆகிய மூன்று அம்சங்களை நோக்கமாகக் கொண்டு 1940இல் "சேவாதனம்" என்ற அமைப்பை தோற்றுவித்தவர் யார்?

A) துர்காபாய் தேஷ்முக்

B) கோதை நாயகி

C) நீலாம்பிகை அம்மையார்

D) மஞ்சு பாஷினி

E) விடை தெரியவில்லை

**158)** டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமை சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்த நாள் எது?

A) 1918, நவம்பர் 16

B) 1916, நவம்பர் 18

C) 1918, நவம்பர் 22

D) 1916, நவம்பர் 20

E) விடை தெரியவில்லை

**159)** வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் சிறை சென்ற மற்றும் அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?

A) அம்புஜத்தம்மாள்

B) முத்துலட்சுமி அம்மையார்

C) ருக்மிணி லட்சுமிபதி

D) பத்மாசினி அம்மையார்

E) விடை தெரியவில்லை

**160)** தொடங்கப்பட்டபோது, "குடிஅரசு" ஏட்டின் பதிப்பாளர் யார்?

A) நாகம்மையார

B) ஈ.வெ.கிருட்டினசாமி

C) பெரியார்

D) தங்கப்பெருமாள்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**161)** திறமையான இளைஞர்களைப் பயன்படுத்தி அரசு சேவைகளை மேம்படுத்தும் முதல்வரின் புத்தாய்வுத் திட்டம் என்ற புதிய திட்டம் நாட்டிலேயே முதல்முறையாக செயல்படுத்தப்பட இருக்கும் மாநிலம்?

A) கேரளா

B) கர்நாடகா

C) மகாராஷ்டிரா

D) தமிழ்நாடு

E) விடை தெரியவில்லை

**162)** 2021 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் பாரதிதாசன் விருதைப் பெற்றவர்?

A) முனைவர் கு.அரசேந்திரன்

B) சூர்யா சேவியர்

C) மதுக்கூர் ராமலிங்கம்

D) புலவர் செந்தலை கவுதமன்

E) விடை தெரியவில்லை

**163)** தமிழ்நாட்டின் எத்தனையாவது பறவை சரணாலயமாக கழுவெளி அறிவிக்கப்பட்டுள்ளது?

A) 11 வது

B) 16 வது

C) 14 வது

D) 20 வது

E) விடை தெரியவில்லை

**164)** யார் மறைந்த தினமானது, 'தியாகிகள் நாளாக' கொண்டாடப்படுகிறது?

A) பதான்கோட் தாக்குதலில் இறந்தவர்கள்

B) சுகதேவ், இராஜகுரு & பகத்சிங்

C) லாலா லஜபதிராய்

D) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

E) விடை தெரியவில்லை

**165)** ஒட்டுமொத்தமாக நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் பிடித்துள்ள இடம்?

A) முதலிடம்

B) இரண்டாமிடம்

C) மூன்றாமிடம்

D) நாங்காமிடம்

E) விடை தெரியவில்லை

**166)** கீழ்காணும் உரங்களில் எது அதிக அளவு நைட்ரஜனைக் கொண்டுள்ளது?

A) கால்சியம் சூப்பர் பாஸ்பேட்

B) கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்

C) யூரியா

D) அம்மோனியம் சல்பேட்

E) விடை தெரியவில்லை

**167)** உலகிலேயே முதன்முதலாக பின்வரும் எந்த நோய்க்கு செயற்கைத் தடுப்பூசி கண்டறியப்பட்டது?

A) போலியோ

B) ஹெப்படைட்டிஸ் B

C) ரேபிஸ்

D) சின்னம்மை

E) விடை தெரியவில்லை

**168)** அறிவியல் ஆய்வு நிறுவனங்களையும் அவை அமைந்திருக்கும் இடங்களையும் பொருத்துக

(i) மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் - 1. மும்பை

(ii) இந்திய வேதி உயிரியல் நிறுவனம் - 2. சென்னை

(iii) தேசிய வேதியியல் ஆய்வகம் - 3. கொல்கத்தா

(iv) தேசிய தாவரவியல் ஆய்வு நிறுவனம் - 4. பூனா

(v) இந்திய புற்றுநோய் ஆய்வு மையம் - 5. லக்னோ

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| B) | 1 | 3 | 4 | 5 | 2 |
| C) | 2 | 3 | 4 | 5 | 1 |
| D) | 5 | 2 | 3 | 4 | 1 |

E) விடை தெரியவில்லை

**169)** கீழ்காணும் எந்த வாயுவுடன் மனிதனின் ஹீமோகுளோபின் மிக அதிகமான பிணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளும்?

A) கார்பன் மோனாக்ஸைடு

B) மீத்தேன்

C) நைட்ரஸ் ஆக்ஸைடு

D) கார்பன்-டை-ஆக்ஸைடு

E) விடை தெரியவில்லை

**170)** புவிக்கு சமமான அளவு சராசரி அடர்த்தி மற்றும்நிறையைக் கொண்டுள்ள கோள் எது?

A) புதன்

B) செவ்வாய்

C) சனி

D) வெள்ளி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**171)** குழந்தையை குடல் மற்றும் சுவாசத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் புரதம் எது?

A) அசிட்டோதயமின்

B) லேக்டோதயமின்

C) அசிட்டோபெரின்

D) லேக்டோபெரின்

E) விடை தெரியவில்லை

**172)** பசுமை இல்ல விளைவு வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) வெப்ப எதிரொளிப்பு விளைவு

B) ஏரோசால்கள் விளைவு

C) ஆல்பிடோ விளைவு

D) மால்டோ விளைவு

E) விடை தெரியவில்லை

**173)** பின்வருவனவற்றில் அதிக வெப்பக்கடத்தல் திறனுள்ள உலோகத்திலிருந்து குறைவான வெப்பக்கடத்தல் திறனுள்ள உலோகம் வரை வரிசைப்படுத்துக:

A) தாமிரம், இரும்பு, அலுமினியம், பித்தளை

B) தாமிரம், அலுமினியம், இரும்பு, பித்தளை

C) தாமிரம், அலுமினியம், பித்தளை, இரும்பு

D) தாமிரம், பித்தளை, அலுமினியம், இரும்பு

E) விடை தெரியவில்லை

**174)** நோய்களையும் நோய்க்காரணிகளையும் பொருத்துக:

(i) காலரா / வயிற்றுப்போக்கு - 1. அசுத்தமான உணவு / நீர்

(ii) நிமோனியா / காய்ச்சல் / காசநோய் - 2. அசுத்தமான நீர்

(iii) டெட்டன்னஸ் / கக்குவான் - 3. இருமல் மற்றும் தும்மல் திவளைகளை சுவாசித்தல்

(iv) டைபாய்டு / காய்ச்சல் - 4. பாக்டீரியாக்களினால் தாக்கப்பட்ட காயங்கள்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 1 | 3 | 2 |

E) விடை தெரியவில்லை

**175)** புகைப் போக்கிகளில் செயல்படும் வெப்பப்பரவல் முறை என்ன?

A) வெப்பக்கடத்தல்

B) வெப்பச்சலனம்

C) வெப்பக் கதிர்வீச்சு

D) இவையனைத்தும்

E) விடை தெரியவில்லை

**176)**

ரூ. 32,000 அசலுக்கு 2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டிக்கும், தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ. 20 எனில் வட்டி வீதம் எவ்வளவு?

(A) $2\frac{1}{3}\%$

(B) $2\frac{1}{2}\%$

(C) $6\frac{1}{4}\%$

(D) $4\frac{1}{2}\%$

**177)**

$\frac{2}{\sqrt{2}}, \frac{3}{2}, \frac{4}{\sqrt[2]{2}}, \frac{5}{4}$, ________

(A) $6/\sqrt{2}$

(B) $6/8$

(C) $6/\sqrt[4]{2}$

(D) $\frac{6}{\sqrt{5}}$

**178)**

$\frac{x^2-25}{x+3}$ என்பதை $\frac{x+5}{x^2-9}$ ஆல் வகுக்கும் போது கிடைக்கும் ஈவு

(A) $(x-5)(x+3)$

(B) $(x-5)(x-3)$

(C) $(x+5)(x-3)$

(D) $(x+5)(x+3)$

**179)**

$+16-48+144-432+\cdots$ என்ற பெருக்குத் தொடர் வரிசையின் முடிவுறா உறுப்புகள் வரை கூடுதல் காண்க.

(A) 4

(B) $-8$

(C) $-3$

(D) $-4$

ETW ACADEMY

**180)**

A முதல் N வரையிலான ஆங்கில எழுத்துக்கள் முறையே 14 முதல் 1 வரை குறிக்கப்படுகிறது. ஆங்கில எழுத்து O என்பது பூஜ்யத்தில் குறிக்கப்படுகிறது மேலும் P முதல் Z வரையிலான ஆங்கில எழுத்துக்கள் $-1$ முதல் $-11$ வரையிலான முழு எண்களால் குறிக்கப்பட்டால் SUCCESS என்ற ஆங்கில வார்த்தையில் உள்ள எழுத்துக்களைக் குறிக்கும் முழுஎண்களின் கூடுதல் காண்க?

(A) 16

(B) 20

(C) 2

(D) 18

**181)**

ஒரு வெற்றுத் தொட்டியை குழாய் A 6 மணி நேரத்திலும் குழாய் B, 8 மணி நேரத்திலும் நிரப்ப முடியும். இரு குழாய்களும் திறக்கப்பட்டு, 2 மணி நேரத்திற்குப் பின் குழாய் A மூடப்பட்டால், மீதமுள்ள தொட்டியை நிரப்ப குழாய் B எவ்வளவு மணி நேரம் எடுத்துக் கொள்ளும்?

(A) 7 மணிகள்

(B) 5 மணிகள்

(C) $\frac{5}{96}$ மணிகள்

(D) $3\frac{1}{3}$ மணிகள்

(E) விடை தெரியவில்லை

**182)**

A என்பவர் B என்பவரைக் காட்டிலும் வேலை செய்வதில் மூன்று மடங்கு வேகமானவர். B ஆனவர் ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில், இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்வர் எனக் காண்க.

(A) 5 நாட்கள்

(B) 6 நாட்கள்

(C) 8 நாட்கள்

(D) 9 நாட்கள்

**183)**

ரூ. 500 க்கு 8% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கு கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம்

(A) ரூ. 32

(B) ரூ. 38

(C) ரூ. 48

(D) ரூ. 50

(E) விடை தெரியவில்லை

**184)**

10% ஆண்டு வட்டியில் ஆண்டுக்கொருமுறை வட்டி கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் ———— என்ற அசலானது ரூ. 2,662 தொகையாக ஆகும்.

(A) ரூ. 2,000
(B) ரூ. 1,800
(C) ரூ. 1,500
(D) ரூ. 2,500
(E) விடை தெரியவில்லை

**185)**

$1000 : 10 = x : \frac{1}{1000}$ எனில் $x$ - ன் மதிப்பைக் காண்க

(A) 10
(B) $\frac{1}{10}$
(C) 1000
(D) $\frac{1}{1000}$

**186)**

கீழ்க்கண்டவற்றுள் மிகப்பெரிய விகிதத்தைக் காண்க.

5 : 7, 1 : 2, 3 : 5, 7 : 10

(A) 5 : 7
(B) 1 : 2
(C) 3 : 5
(D) 7 : 10

**187)**

$21x^2y, 35xy^2$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி (மீ.பொ.வ) காண்க

(A) $3x^3y^3$
(B) $5x^3y^3$
(C) $7xy$
(D) $9xy^2$
(E) விடை தெரியவில்லை

**188)**

408, 170 என்ற எண்களின் மீப்பெரு பொது வகுத்தியை காண்க (மீ.பொ. வ) காண்க.

(A) 36
(B) 34
(C) 33
(D) 30

ETW ACADEMY

**189)**

600 ன் $x$% ஆனது 450 எனில் $x$ ன் மதிப்பென்ன?

(A) 75
(B) 100
(C) 125
(D) 150

**190)**

பின்வரும் தொடரின் கூடுதலைக் காண்க.

$12^2 + 13^2 + 14^2 + \ldots\ldots + 35^2$

(A) 14404
(B) 14104
(C) 14204
(D) 14304

**191)**

ஆண்டுக்கு $x$% வட்டி வீதம் $x$ ஆண்டுகளுக்கு ரூ. $x$ தனிவட்டியாக கிடைக்கபெறும் அசல் (தொகை) எவ்வளவு?

(A) ரூ. $x$
(B) ரூ. $\left(\frac{100}{x}\right)$
(C) ரூ. $100x$
(D) ரூ. $\left(\frac{100}{x^2}\right)$

**192)**

அடுத்த உறுப்பைக் காண்க.

$\frac{1}{2}, \frac{1}{3}, \frac{5}{6}, \frac{7}{6}, 2, ?, \cdots$

(A) $-\frac{5}{6}$
(B) $\frac{7}{3}$
(C) 4
(D) $\frac{19}{6}$

**193)**

IS = 26 மற்றும் WAS = 38 எனில் ARE ன் மதிப்பு எதற்கு சமம்?

(A) 60
(B) 63
(C) 57
(D) 58

**194)**

இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

(A) 1
(B) $\frac{1}{4}$
(C) $\frac{1}{2}$
(D) $\frac{3}{4}$

**195)**

20 சிவப்பு நிறப் பந்துகள் அடங்கிய பையிலிருந்து ஒரு சிவப்பு நிறப் பந்து கிடைப்பதற்கான நிகழ்தகவு காண்க.

(A) 0 (B) 1
(C) $\frac{1}{20}$ (D) $\frac{1}{2}$

**196)**

ஒரு செவ்வகத்தின் மூலைவிட்டம் $\sqrt{41}$ செமீ மற்றும் அதன் பரப்பு 20 ச.செமீ எனில் செவ்வகத்தின் சுற்றளவு என்ன?

(A) 9 செமீ
(B) 18 செமீ
(C) 20 செமீ
(D) 41 செமீ

**197)**

ஒரு திண்ம அரைக் கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

(A) 4158 மீ$^3$
(B) 4158 மீ$^2$
(C) 4185 மீ$^2$
(D) 4185 மீ

**198)**

ஒரு குறிப்பிட்ட தொகையானது 8% வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் ரூ. 10,080 ஆகிறது. அசலைக் காண்க

(A) ரூ. 7,000
(B) ரூ. 7,200
(C) ரூ. 7,100
(D) ரூ. 7,300

ETW ACADEMY

**199)**

எத்தனை ஆண்டுகளில் ரூ. 5,600 ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் ரூ. 6,720 ஆக உயரும்?

(A) 3 ஆண்டுகள்

(B) 4 ஆண்டுகள்

(C) $3\frac{1}{3}$ ஆண்டுகள்

(D) 2 ஆண்டுகள்

**200)**

சுருக்குக: $\frac{x+2}{x^2+3x+2}+\frac{x-3}{x^2-2x-3}$

(A) $\frac{1}{x+1}$

(B) $\frac{-1}{x+1}$

(C) $\frac{2}{x+1}$

(D) $\frac{-2}{x+1}$

(E) விடை தெரியவில்லை

***

© ETW Academy

ETW ACADEMY